

# சிலுவைப்பாதை 2023

## மகிழ்வின் தவநாட்கள்





- மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

## தொடக்க செபம்

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!

எல்லோரும்: இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச்சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

### சுருக்கமான மனத்துயர் செபம்:

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன்.

*எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக,*

*இறைவா, என்மேல் இரக்கமாயிரும்.*

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## சிலுவைப்பாதை நிலையின் தொடக்கத்தில்

இயேசு கிறிஸ்து பாடுபட்ட ----ஆம் நிலை

இயேசுவே! உமது திருச்சிலுவையை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஏனெனில் உமது திருச்சிலுவையால் நீர் எங்களை மீட்டருளினீர்.

## சிலுவைப்பாதை நிலையின் முடிவில்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே

எங்கள் மேல் இரக்கமாயிரும் - 2

இறந்த நம்பிக்கையாளர்கள் உமது இரக்கத்தினால் உம்மில் நிறைவாழ்வு பெறுவார்களாக! ஆமென்.

# முன்னுரை

இதுவே தகுந்த காலம்!



மகிழ்ந்து இருப்பதற்காகவா?

துயரப்படுவதற்காகவா?

துக்கத்தை நினைப்பதற்காகவா?

பாடுகளைத் தியானிப்பதற்காகவா?

பரமனின் அன்பைச் சுவைப்பதற்காகவா?

மனிதர்களின் துரோகத்தை அறிந்து கொள்வதற்காகவா?

கொடியவர்களின் கொட்டத்தை எண்ணுவதற்காகவா?

ஓடி ஒளியும் மனிதர்களை அறிந்து கொள்வதற்காகவா?

நா கூசாமல் கூச்சலிடும் ஓசைகளைக் கேட்பதற்காகவா?

கை கழுவும் மனசாட்சி இல்லாதவர்களைக் கண்டு கொள்வதற்காகவா?

தாயின் தவிப்பை உணர்ந்து கொள்ளவா?

கண்ணீர் துடைக்கும் கரத்தின் தழுவலை அனுபவிக்கவா?

உதவும் கரங்களின் உண்மை கரிசனையை உணரவா?

தகுந்த காலம் எதற்கு? ஏன்?

வாழ்வின் ஓட்டத்தில் என்ன நேர்ந்தாலும் என்னவர் என்னோடு என்று உணர்ந்து மகிழ்ந்திருக்கவே தகுந்த காலம், இந்த '**தவக்காலம்**'.

மகிழ்வு என்பது மனத்தின் ஒரு உணர்வு,

உள்ளார்ந்த மனத்தின் ஆழத்தில் ஊற்றெடுக்கும் உணர்வே அது.

என்ன நேர்ந்தாலும் என்னவர், என் மணவாளன் என்னோடு இருக்க

நான் ஏன் நோன்பு இருக்க வேண்டும் என மகிழ்ந்திருக்கும் காலம் இது.

பாடுகளின் பாதையில் பயணிப்போம்.

மகிழ்ந்திருக்க கற்றுத்தரும் பாடத்தைப் படித்துக் கொள்வோம்.

இறைவனில் மகிழ்ந்திருப்பதோடு,

இறைச் சாயலில் இருப்போரை மகிழச் செய்ய

இந்த பக்தி முயற்சியில் பங்கேற்போம்,

பயன்பெறுவோம்,

பலன் கொடுப்போம்.

# முதல் நிலை

## இயேசுவுக்கு மரணத் தீர்ப்பிடப்படுகிறது.

### தீர்ப்பு!



தீர்ப்பிடத் துணிவது ஏன்?

பிறரைத் தீர்ப்பிட மகிழ்வது ஏன்?

என்னைப் பிறர் தீர்ப்பிடக் கூடாது என்று கூறும் நான்

பிறரைத் தீர்ப்பிட முந்திக் கொள்வது ஏன்?

என்னை நான் அறிந்து கொள்ள விரும்பவில்லை.

என் தவறை நான் மறைத்திடவே விரும்புகிறேன்.

பிறர் என் தவறை அறிந்து கொள்ள விரும்புவதும் இல்லை.

பிறர் என்னைச் சுட்டிக் காட்டி குற்றப்படுத்தி விடக்கூடாது.

மகிழ்ந்திருக்க என்னால் முடிகின்றதா?

நான் பிறரைக் குற்றப்படுத்தும்போது உறவுக்கு உலை வைக்கின்றேன்.

பிறரை விட நான் யோக்கியன் என உணர்வது அற்ப இன்பமல்லவா?

குற்றப்படுத்திப் பிறரை நான் பேசி பழிதீர்க்கும்போது

நான் உதிர்க்கும் வார்த்தைகளினால் நான் ஏற்படுத்தும் காயம் ஆறிவிடுமா?

இவை என்னை மகிழ்வுபடுத்துமா?

நான் மகிழ்ந்திருக்க செய்ய வேண்டியது என்ன?

என்னை நான் அறிந்து கொள்ள வேண்டும்.

என்னை நான் புரிந்து கொள்ள வேண்டும்.

என்னை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனக்கு நானே நீதிபதியாக இருந்து

என்னை நான் சரிவர கணித்து சரிவர தீர்ப்பிட்டு

என்னை நானே மாற்றிக் கொள்ள முன்வரும் போது

நான் மகிழ்ந்திருப்பேன் என்பதுதானே யதார்த்தம்.

முன்னொரு காலத்தில் மறைக்கல்வி கற்றுத்தந்த பாடத்தை நமதாக்குவோம் இன்றே.

ஒவ்வொரு நாளும் இரவு படுக்கைக்குச் செல்லும்போதும் '*சுய ஆய்வு* செய்து நம்மை நம்முடைய குறைகள், குற்றங்களுக்காக மனம்வருந்தி, மன்னிப்பு கேட்டு விட்டு படுக்கைக்குச் செல்ல சொல்லித் தந்தார்கள்.

**திருப்பாடல் 04:04 படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாயிருங்கள்.**


இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

# இரண்டாம் நிலை

## இயேசுவின் தோள்மேல் சிலுவை சுமத்தப்படுகிறது.

### சுமை!



சுமைகளை சுமையாக கருதினால் துயரமே!

வருத்தத்தோடு சுமைகளைச் சுமந்தால் வேதனையே!

வேண்டாத வெறுப்போடு ஏற்றுக்கொண்டால் எரிச்சலே.

கட்டாயத்தினால் சுமக்க முன்வந்தால் கோபமே வெளிப்பாடு.

எரிச்சலோடு சுமக்க முற்பட்டால் மனமகிழ்வு நமதாகுமோ?

சுமைகளை சுகமாக சுமக்க முற்பட்டால் மகிழ்வே.

தாய்மையின் சுமை தாய்க்கு பாரமல்ல, எனவே மகிழ்வே.

உண்மையாய் உழைக்கும் தகப்பனுக்கு பாரமல்ல, மகிழ்வே.

சமூக போராளிகளுக்கு எந்த சுமையும் மகிழ்வானதே. காரணம்,

சமூகத்தின் மீது அவர்கள் கொண்ட காதலே காரணம்.

உறவுக்கு கரம் கொடுப்பவர்கள் எல்லாருக்குமே

சுமைகளும் சுகமான அனுபவமே, உள்ளத்தின் அன்பினால்.

நம் பாவங்களையெல்லாம் அவர் தன் தோள்மீது சுமந்து கொள்ள முற்பட்டது

இந்த மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பாலே.

பாவிகளையே தேடி வந்தேன் என்று சொன்னவர்

அவர்களைப் பாவத்தின் பிடியில் இருந்து விடுவிக்க

பாரமான சிலுவையைச் சுமக்க முன்வந்தது

பரிவு, கரிசனை, அக்கறையினாலேயே.

அன்றாடச் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னை

பின்பற்றுபவனே என்னுடைய சீடன் என்றார்.

நம்முடைய சிலுவைகளை நாம் சுமக்க முன்வரும்போது

நமக்கு மகிழ்வு தானே.

சிலுவைகளில்தானே பக்குவமடைகின்றோம்.

பாடம் படித்து கொள்கின்றோம்.

பரமனைத் தேடச் செய்கின்றது.

அப்பொழுது அது மகிழ்வைத் தரும் ஒரு நிகழ்வு தானே.

தன்னுடைய பைகளை தன்னால் இயன்றவரை தானே சுமந்து செல்ல

முன்வந்தாராம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

அதிலே மகிழ்வும் கண்டார்.

அதிகார போதை தலைக்கேறி அடுத்தவரை

சுமக்கச் செய்வது மகிழ்வை ஒருபோதும் தராது.

**சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே! எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத்தேயு 11:28**

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

## மூன்றாம் நிலை

### இயேசு முதல் முறை கீழே விழுகிறார்



#### தடுமாறினார்!

குழந்தைகள் கீழே விழக்கூடாது என நினைக்கும் பெற்றோர் குழந்தைக்கு துயரத்தையே தருகிறார்கள்.

கீழே விழுந்த குழந்தையை சமாளிக்கத் தெரியாத பெற்றோர் தரையை அடித்து துவைத்து தனயனுக்கு தவறான பாடம் புகட்டுகின்றனர்.

குழந்தை தடுமாறி விழுந்துவிடக்கூடாது என தூக்கியே சுமக்கும் பெற்றோர் குழந்தைக்கு துரோகமே செய்கின்றனர்.

குழந்தையாய் இருக்கும்போது நடக்க தடுமாறுகின்றோம்.
வாலிப வயதினிலே படிப்பதில் தடுமாறுகின்றோம்.
இளைய வயதினிலே அன்பினில் தடுமாறுகின்றோம்.
வாழ்க்கையை எடுத்துச் செல்ல தெரியாது தடுமாறுகின்றோம்.
வாழ்க்கையைக் கற்றுக்கொடுக்க தெரியாது தடுமாறுகின்றோம்.
கேள்விகள் எழும்போது இறை நம்பிக்கையில் தடுமாறுகின்றோம்.
நோய்வாய்ப்படும்போது உடலளவில் தடுமாற்றத்தைப் பெறுகின்றோம்.
முதிர்ந்த வயதினில் மீண்டும் நடக்க தடுமாறுகின்றோம்.

மொத்தத்தில் வாழ்க்கையின்
எல்லாக் காலங்களிலும் தடுமாறுகின்றோம்.
தடுமாறாமல், தடுக்கி விழாமல், திசைமாறாமல்,
கீழே விழாமல் வாழ்ந்தவர் உண்டோ?

புல் தடுக்கி விழுந்தவர்களும் உண்டு.

ஃபுல்லா குடித்துவிட்டு விழுந்தவர்களும் உண்டு.

விழுந்துவிட்டோம் என்பதில் அல்ல.

விழுந்தேன், எழுந்தேன், நடை பயணிக்கின்றேன்

என்பதில்தான் மகிழ்வு உண்டு.

விதை விழுந்தது, மண்ணைக் கீறிட்டது, முளைவிட்டது,

பயிர் விளைந்தது, பலன் கொடுத்தது.

**கண்ணீரோடு விதை விதைத்தவர்கள் பெருமகிழ்வோடு அறுக்கச் செல்கின்றனர். திருப்பாடல் 126:5**

வாழ்க்கையில் தடுமாறியவர்கள்,

தடம் மாறியவர்கள் தடம் பதித்துள்ளார்கள் என்பது உண்மை.

புனித பவுல், புனித அகுஸ்தினார்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

# நான்காம் நிலை

## இயேசு தம் தாயைச் சந்திக்கிறார்.

### தாயன்பு!



தாய்மையை தவறாக அடைந்தோர் மகிழ்ந்ததில்லை.

தாயன்பைப் பெறாதவர்கள் மகிழ்ந்ததில்லை.

தாயன்பைக் கொச்சைப்படுத்தியவர்கள் மகிழ்ந்ததில்லை.

தாயன்பை அலட்சியம் செய்தவர்கள் மகிழ்ந்ததில்லை.

பிள்ளை பெறாதவர்களும் தாய்மையின் மகிழ்வை,

தாயன்பின் மகிழ்வை உணர்வது உண்டு, ஊராரை தூக்கிச் சுமக்கும் போது…

தூய ஆவியின் ஆசீரால் என்றும் கன்னியான அன்னைமரி

தாய்மையின் மகிழ்வைப் பெற்றார்கள்.

‘இதோ உமது வார்த்தையின்படியே ஆகட்டும்’ என்றவர்கள்

வார்த்தையானவரையே சுமக்க வாய்ப்புப் பெற்றார்கள்.

முதிர்ந்த வயதில் ஒரு தாய் கருத்தாங்கியிருக்கிறார்கள்

என்று கேட்டவுடனே மூன்று மாதக் காலம் தங்கியிருந்து

தன் தாயன்பைத் தந்து உதவினார்கள்.

‘இரசம் தீர்ந்து போனதே’ என தவித்த போது,

தனயனிடம் தாயின் பரிவோடு பரிந்துரைத்தார்கள்.

கூட்டத்தில் பிள்ளையைக் காணோம் என்றவுடனே

தவிப்போடு தேடி கண்டடைந்த உள்ளம் தாயின் உள்ளம்.

‘உனது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும்’ என்பதை

உணர முடியாத நிலையிலும்

தன் தாயின் கடமையை செய்ய துணிந்த தாய்.

‘இறைச் சித்தத்திற்கு பணிந்தவர்களே தாயினும் மேலானவர்கள்’

என்ற மொழி கேட்ட போது பேரன்பால் பெருமகிழ்வும் கொண்ட தாய்.

பாடுகளின் பாதையில் மனுக்குலத்தின் மீட்புக்காக

முழு மனிதனாக தன் மகன் பாடுகளை ஏற்க

பொறுப்புடனே ஊக்கமூட்டி, உற்சாகப்படுத்திய தாய்.

**“ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது.” லூக் 01:47**

தாய்மையின் மகிழ்வையும்,

தாயன்பின் பெருமையையும் தரணிக்குச் சொல்வோம் வாரீர்!

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

## ஐந்தாம் நிலை

## இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்.

### உதவி!

உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருங்க.

உதவி செய்கிறோம் என்கிற பெயரில் இன்று ஏகப்பட்ட உபத்திரவம்.



வரியும் உயர்ந்து கொண்டே போகிறது.

வட்டியும் உயர்ந்து கொண்டே போகிறது.

டாஸ்மாக் பணத்தில் இன்று காலை மற்றும் மதியம்

குழந்தைகளுக்கு உணவு கொடுக்கிறார்கள்.

இலவசம், இலவசம் என கையேந்தி நிற்க வைத்து

கோஷம் போட செய்கிறார்கள்.

உதவி செய்கிறவனுக்கும் மகிழ்வு இல்லை.

உதவி பெறுகிறவனுக்கும் மகிழ்வு இல்லை.

சமூகத்தில் அமைதியாக இன்றும் சத்தமே இல்லாமல்

உதவி நடந்து கொண்டே தான் இருக்கின்றது.

மகள் திருமணத்திற்கு வைத்திருந்த பணத்தில் எத்தனையோ பேருக்கு

உணவு கொடுத்த குடும்பத்தை அறிவோம்.

தனக்கு ஏற்பட்ட இலாபத்தை தன்னுடைய ஊழியர்களுக்கு

பகிர்ந்து கொடுத்து குடும்பத்தை எல்லாம் மகிழச் செய்த

முதலாளியை சமூகம் அறிந்துள்ளது.

தங்களது திருமணத்தின் ஆடம்பரத்தை நிராகரித்துவிட்டு

மொத்தப் பணத்தையும் அன்னை தெரசா சமூக சேவை மையத்தில்

கொடுத்து எளிய திருமணம் கண்ட தம்பதியரும் உண்டு.

‘வலக்கை செய்வதை இடக்கை அறியாது இருக்கட்டும்.’

‘சின்னஞ்சிறியவர்களுக்கு நீங்கள் எதையெல்லாம் செய்கிறீர்களோ அதையெல்லாம் எனக்கே செய்தீர்கள்’ என்றார் இறைமகன்.

உதவி செய்யும் மாந்தர்களால் உதவி பெறுபவர்கள் மகிழ்கிறார்கள்.

உதவி பெறுபவர்களின் முகம் மலரக் கண்டு உதவி செய்பவர்களும் மகிழ்வு காண்கிறார்கள் என்பதுவே உண்மை.

நாளைக்கு என்ன என்பதைக் குறித்து கவலைப்படாமல் கோவிலிலே இரண்டே இரண்டு செப்புக்காசுகளைப் போட்ட பெண்மணியை அத்தனை பேர் முன்னிலையில் மகிழச் செய்தார். லூக்கா 21ஆம் அதிகாரம்.

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்; அவன் ஊருக்காக கொடுத்தான்.

ஊருக்கே கொடுத்து உதவி செய்பவர்களை

கொடுத்தவரும் (கடவுள்) கண்ணோக்குகின்றார்.

கொடுத்தவர்களை இன்னும் நிறைவுள்ளவராக்கி மகிழ்கின்றார்.

ஆகவே இங்கு கொடுத்தவரும், கொடுத்ததைப் பெற்று கொடுப்பவரும்

அதனைப் பெறுகின்றவரும், ஆக மூன்று பேருமே மகிழ்கிறார்கள்.


இவர்களோடு தந்தை, மகன், தூய ஆவியானவரும் மகிழ்கின்றார்கள்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

## ஆறாம் நிலை

## இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறார்.



### விரல்கள்!

என் தாய் எனக்குச் சொல்லி வளர்த்த வார்த்தைகள் இவை:

"பத்து விரல்களால் உழைத்து

ஐந்து விரல்களால் உண்பது என்பது மகிழ்வானது."

கைவிரல்கள் இல்லையென்றால் என்ன? கால் விரல்களால் படிப்பேன்,

ஓவியம் தீட்டுவேன் என மகிழும் நபர்கள் நம்மிடையே உண்டு.

காலே இல்லையென்று போனாலும், என் கை விரல்களால் என்னை தூக்கி

ஆளாக்கிய பெற்றோரின் கண் துடைப்பேன் என்பதுதானே மகிழ்வு.

என்னங்க இது பெரிது? எனக்கு கைவிரலும் இல்லை, கால் விரலும் இல்லை.

என்னைப் படைத்து, பராமரித்து, பாதுகாத்து வரும்

என் தெய்வத்தின் விரல்களில், கரங்களில் நான் இருக்கிறேன்.

உள்ளங்கையில் என்னைத் தாங்கிய அவரின் புகழ் பாடுவேன் என

ஊர் ஊராக இறைபோதகராகி உள்ள

நண்பர்களை (திரு. நிக் - ஆஸ்திரேலியா) அறிந்துள்ளோமே நாம்.

விரல்களைத் தந்தவர் நம்மைத் தன் கரத்தின் பிடியில் இருந்து

விலகிடச் செய்வாரோ?

நாமே அவரது கருத்தில் இருந்து நம்மை விடுவித்து தூர தூரமாக

ஓடினாலும், நம் கண்களின் கண்ணீரைத் துடைக்க

தன் விரல்களால் நம் கன்னத்தை தழுவிட தருவாரே.

விரல்களின் தழுவல் தாய்க்கு, தந்தைக்கு மகிழ்வே.

விரல்களால் அரவணைக்கப்படும்போது குழந்தைக்குப் பாதுகாப்பே.

அதுவே பேரின்பம்.

ஊடக ஆதிக்கத்தால்

இன்று விரல்களும், தழுவல்களும் கொச்சைப்படுத்தப்பட்டு

அதுவே எண்ணற்ற வேதனைகளைத் தருகின்றது.

இதனால் குழந்தைகளைத் தொடக்கூடாது

என கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.

பாடம் படிக்க செல்லும் பள்ளிக்கூடம் இன்று அறத்தை துறந்து

விரல்களால் தழுவும் இடமாகி கற்புக்குக் களங்கத்தைத் தருகின்றது.

அலைப்பேசி, கணினியையே இன்று தடவிக் கொண்டு உள்ள

விரல்களால் யாருக்கென்ன இலாபம்?

மகிழ்வையா இது தருகின்றது?

கோவிலில் கருவறையும், காவல் மாடங்களும் இன்று சூறையாடும்

சூத்திரதாரிகளின் புகலிடமாகிப் போனதும் வேதனையே.

**யோவான் 08:06 இயேசு குனிந்து விரலால் தரையில் எழுதிக் கொண்டிருந்தார். யாரையும் தீர்ப்பிடச் செய்யாமல், தானும் தீர்ப்பிடாமல் பெண்ணுக்கு மாண்பைக் கொடுத்து மகிழச் செய்தார்.**

வெரோணிக்காவின் விரல்கள் கன்னத்தை தொட்டதுமே இருவருமே மகிழ்ந்தனர்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

## ஏழாம் நிலை

### இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

**நிலைமாறும்!**

நிலைமாறும் உலகில் உண்மை, வாய்மை நிலைக்குமோ?

வாக்கு கொடுத்துவிட்டு, வாக்குகளைப் பெற்று, வென்றுவிட்டு,

காசு, பணம், பதவி என அலைந்து நிலைமாறும் மனிதர்கள் அதிகம்.



கோவிலில் கரம் பிடித்து, உறுதி தந்துவிட்டு,

வரதட்சணை, நோய், சாதி, புகழ், பெருமை என

சில சாத்தான்களுக்கு அடிமைப்பட்டு

நிலைமாறும் மனிதர்களால் இந்த சமூகம் கறைப்பட்டுள்ளது.

ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் என வாக்கு கொடுத்துவிட்டு

அள்ளி, சுருட்டி எடுத்துச் செல்வோரால்

இன்று உண்மையை உறுதியாய்ச் சொல்ல ஆளில்லாத நிலைப்பாடு.

இதனால் இன்று, சமூகம், குடும்பம், திருஅவை, தனிமனித வாழ்வு

என எல்லா இடங்களில், நிலைமாறும் இடங்களில் நிலைக்கும்

என்ற கனவில் மட்டுமே வாழும் சூழல்,

நிஜத்தில் இன்று சூன்யமான சூழலே நம்மை சூழ்ந்து நிற்கின்றது.

மகிழ்வு நமதாக வேண்டும் என்று நாம் விரும்பினால்,

காலங்களும் மாறலாம்,

கோலங்களும் மாறலாம்.

காட்சிகளும் மாறலாம்.

உண்டவர்கள் இரண்டகம் செய்துவிட்டு போகலாம்.

உடன் இருந்தவர்கள் துண்டை தூர எறிந்துவிட்டு போகலாம்.

என் அன்பு மாறாது என்று இறுதி மட்டும் உறுதியான மனதுடனே

பயணப்பட்ட கல்வாரி நோக்கி எழுந்து நடந்திட்டவரின் அடி தொட்டு

நாமும் உறுதியாய் இறுதிவரை உண்மையாய் வாழ்வோம் எனில்

இறைமகனுக்கு கிடைத்ததையே பரிசாக நாமும் பெறுவோம்.

அதுவே நிலையான மகிழ்வினை நமக்குத் தரும் என்பதுவே உண்மை.

**மத்தேயு 24:13 இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர்.**

உறுதியாய் உண்மையாய்

இறுதிவரை வாழ்வோம்; மகிழ்வோம்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

# எட்டாம் நிலை

## இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

### கண்ணீர்!



நீலிக் கண்ணீர் வடிப்போர் மகிழ்வதில்லை.

பிறரது தடுமாற்றத்தை, பலவீனத்தைக் கண்டு பரிகசித்து

கண்ணீர் வடிப்பவர்கள் மகிழ்வதில்லை.

பிறரை கண்ணீர் வடிக்கச் செய்யும்

வார்த்தைகளை உச்சரிப்போர் மகிழ்வதில்லை.

அதிகார போதையில் பிறரை அழச் செய்யும் மனிதர்கள் மகிழ்வதில்லை.

பிறரின் பச்சாதாபத்தைப் பெற கண்ணீர் வடிக்கும் அன்பர்கள் மகிழ்வதில்லை.

பழைய கதையொன்று சொல்லும் செய்தி இது.

விண்ணகத்தையே மகிழ்விக்க கூடிய பரிசு ஒன்றை

மண்ணகத்தில் இருந்து பெற்று வாருங்கள் என

விண்ணக தூதர்கள் மண்ணகத்திற்கு அனுப்பப்பட்டனர்.

பலரும் பல பரிசை எடுத்துச் சென்றனர்.

விண்ணகம் மகிழவில்லை.

**லூக்கா நற்செய்தி** 15:7 **"மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும்."**

விண்ணக தூதர், ஓர் ஆலயத்தில் ஒருவர் தன் பாவங்களுக்காக

மனம் வருந்தி, மனம் திருந்தி, மன்னிப்பு கோரி வடித்த

கண்ணீர் துளிகளை எடுத்து விண்ணகம் சென்ற போது,

இதுவே அற்புதமான பரிசு என்று சொல்லி விண்ணகமே மகிழ்ந்ததாம்.

அழுவாரோடு அழுவது என்பது சிறப்புடையதுதான்.

அது அழுவோரின் பாரத்தைக் குறைக்கும்.

அவருக்கு ஆறுதலாக இருக்கும் என்பது உண்மையே.

பேதுருவைப் போல, தனது பாவத்திற்காக மனம் வெதும்பி அழுத போது,

இயேசுவின் கடைக்கண் பார்வை கிட்டியது.

அதுவே அவருக்கும் மீட்பானது.

இது அவருக்கு கொடுத்த இன்பம் எவ்வளவு பெரியது.

இயேசுவின் மொழி சொல்லுகிறது.

உங்களுக்காக, உங்களது குடும்பத்தாரின்,

மக்களின் பாவங்களுக்காக கண்ணீர் சிந்துங்கள் என்று.

ஒப்புரவைத் தேடாது, நாடாது மகிழ்வுண்டோ?

பாவத்திற்கு மேல் பாவம் செய்து பாவமன்னிப்பு பற்றி

அச்சமில்லாது வாழும் போது மகிழ்வு உண்டோ?

நான் வானத்திற்கு எதிராக, உமக்கு எதிராக குற்றம் புரிந்து விட்டேன்

என மனம் வருந்தி, கண்ணீர் சிந்தி, ஒப்புரவைத் தேடுவோர் பெறும்

மகிழ்வுக்கு எல்லையே இல்லை. விண்ணகமும் மகிழும்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

## ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

### வீழ்தல்!

நீர் வீழ்ச்சியை பார்த்து மகிழ்வோர் பலருண்டு.

மேலிருந்து விழும் நீர்வீழ்ச்சியிலே குளித்து மகிழ்வோர் நம்மில் உண்டு.

வானத்தின் பலகணிகள் திறந்து மழைநீர் வீழ்வது பூமியை நனைக்க.



மண் வாசனை மனிதனை மகிழ்விக்கின்றது.

பயனற்ற சருகுகள் வீழ்வது உரமாகின்றது.

மரத்தில் புதிய தளிர் உருவாக இடமளிக்கின்றது.

இலையுதிர் காலமும் மொட்டை மரங்களும் வாழ்வோருக்கு

நம்பிக்கையையே தருகின்றன.

மூழ்கிப் போகும் போது கரம் நீட்டி காப்பாற்ற கோரினார் பேதுரு.

வீழ்ந்து போகும் போது இறைக்கரம் தேடுகின்றோம்.

இறைவனை இறுகப்பிடித்துக் கொள்கின்றோம்.

நான் வீழ்ந்தேன்.

ஆனால் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதில் மகிழ்வு இல்லை.

நான் வீழ்ந்தேன்.

நல்ல வேளை யாரும் அருகில் இல்லை,

என்னைப் பார்க்கவில்லை என்பதில் மகிழ்வு இல்லை.

நான் வீழ்ந்தேன்.

ஆம், நான் வீழ்ந்தேன், ஆனால் எழுந்தேன்.

விடாமுயற்சியுடனே தொடர்ந்து ஓடுகின்றேன்.

இன்னும் வாழ்வேன் என்ற நம்பிக்கையுடனே தொடர்ந்து பயணிக்கின்றேன்
என்பதில்தான் மகிழ்ச்சியுண்டு.

தாமே சோதனைக்கு உள்ளாகி புடமிடப்பட்டதனால்
சோதிக்கப்படுகிறவர்களுக்கு உண்மையாய் உறுதியாய்
கற்றுக் கொடுக்க முடிகின்றது என்று
எபிரேயருக்கு திருமடல் எழுதிய ஆசிரியர் கூறுகின்றார்.

பிறரை வீழ்த்திவிட்டேன் என்பதில் அல்ல.
பிறரை விழச் செய்துவிட்டேன் என்பதில் அல்ல.
நானே வீழ்ந்தேன், எழுந்தேன், நடக்கின்றேன், ஓடுகின்றேன்,
பாடம் படித்துக் கொண்டேன்.
அதனைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கவும் செய்வேன்
என்பதில் தான் உண்மையான மகிழ்வு உண்டு.

**திருப்பாடல் 32:3,11 "என் பாவத்தை அறிக்கையிடாதவரை நாள் முழுவதும் நான் கதறி அழுததால், என் எலும்புகள் கழன்று போயின. என் குற்றங்களை ஒப்புக் கொண்டேன். அகமகிழ்ந்து பாடுவேன்" என்கிறார் தாவீது.**

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

## பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்.

### விரித்து கொடுத்தேன்!

கரங்களைக் கூப்பி நான் செல்ல என் கடவுள் - தன்

கரங்களை விரித்து என்னை அரவணைக்கின்றார் என்பது எவ்வளவு மகிழ்வு.



தன் கரங்களை விரித்து வரும் குழந்தையை

கரங்களை விரித்து அள்ளி எடுத்து முத்தமிட்டு

அரவணைப்பது எவ்வளவு ஆனந்தம்.

வாரி வாரி கொடுத்து மகிழ்வதில் எவ்வளவு ஆனந்தம் உண்டு.

போரிலே சிதறுண்ட ஒரு சிலுவை சுரூபத்தில்

ஒரு கை முறிந்து உடைந்து போனதாம்.

கீழே எழுதி வைத்தார்களாம் "நீங்களே எனது கரங்கள்" என்று.

கிறிஸ்துவின் கரங்களாக இம்மண்ணுலகில் நாம் செயலாற்றுவது

எவ்வளவு அற்புதமானது.

பிறரை ஆசீர்வதிக்க, பிறருக்கு உணவு ஊட்ட, பிறரை மன்னிக்க,

பிறரைத் தூக்கிவிட, பிறரை எழுப்பிவிட, பிறரை அரவணைக்க,

பிறரை அள்ளிக் கொள்ள....

> மாவீரர் அலெக்சாண்டர் அனைத்தையும் அடிபணியச் செய்து ஆண்டவர்.
>
> தன்னை அடக்கம் செய்ய தூக்கிச் செல்லும் போது,
>
> "என் கரங்களை விரித்து காட்டுங்கள்.
>
> ஒன்றுமில்லாமையிலிருந்து வந்த நான் ஒன்றுமில்லாமலேயே போகிறேன்"
>
> என்று என் மக்கள் பாடம் படித்துக் கொள்ளட்டும் என்று.

கரங்களால் நடக்கும் அற்புதம் ‘தொடுகை’.

அந்த தொடுகையால் ஆனந்தம் பிறக்கிறது. அகமகிழ்வு கிடைக்கிறது.

கரங்களால் அள்ளிக் கொடுக்க, கரங்களால் பெறுவோருக்கும் மகிழ்வு.

கொடுத்து கொடுத்து சிவந்த கரத்தின் மனிதருக்கும் மகிழ்வு.

எண்ணற்ற மகிழ்வினை நம்முள் கொண்டு

எதற்கு மகிழ்வினை வெளியே தேடி அலைந்திட வேண்டும்?

கரங்களை விரித்துக் கொடுத்தால், காட்டினால்

நம்மிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்பதுவே யதார்த்தம்.

கரங்களை விரித்துக் கொடுத்து அரவணைப்போம்;

அகமகிழ்வு கொள்வோம்.

இறைப்பணி தொடர்வோம்.

அற்புதங்கள் + அதிசயங்கள் காண்போம்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

# பதினொன்றாம் நிலை

## இயேசுவைச் சிலுவையில் ஆணிகளால் அறைகிறார்கள்.

### சிலுவை!



இரு மரக்கட்டைகள் இணைந்தால் சிலுவை.

இணைந்தாலே மகிழ்வு.

தனிமரம் தோப்பாகாது என்றான் தமிழன்.

சிலுவையும் மகிழ்வே.

காலையில் எழுந்து நாம் வரைந்து கொள்ளும் சிலுவை,

இரவு படுக்கையைச் சுற்றி நாம் வரையும் சிலுவை வரை

ஒவ்வொரு நாளும் நாம் வரையும் சிலுவை எத்தனை எத்தனையோ.

அவை ஆற்றும் அற்புதம் நாம் அறிந்தும் அறியாத ஒன்றே.

இவை நமக்கு தரும் மகிழ்வு என்பது எண்ணிலடங்கா.

அவமானத்தின் சின்னமாய் இருந்த சிலுவை,

பரமனின் கை பட்டு

மகிழ்வின் சின்னமாய் மாறியது.

சிலுவையில் அவரைப் பிணைத்துக் கொள்ள கையளித்தார்.

மரக்கட்டை சிலுவையில், மூன்று ஆணிகளால்

மனிதனாக மண்ணிலே மனுவுரு எடுத்த இறைவனின் மகன்

தன்னை அறைந்து கொள்ளச் சம்மதித்ததால்,

வெறும் மரமான சிலுவை புனிதமானது.

இறைமகனை தன்னைப் பிணைத்துக் கொண்டதால்

வழிபடும் புனித பொருளானது சிலுவை.

‘அன்றாட சிலுவையைச் சுமந்து கொண்டு

என்னைப் பின்செல்பவனே என் சீடன்’ என்றார் இறைமகன்.

வாழ்வில் வரும் சிலுவைகளை மிகுந்த மகிழ்ச்சியுடனே,

சுமப்பவர்கள் எவ்வளவு பேறுபெற்றவர்கள்.

நடக்க இயலாத தன் மகள் சகோதரி நிர்மலாவைச் சுமந்த

ஆசிரியரின் செயல் பாராட்டுக்குரியதே.

சுகவீனமான தன் மகள் சகோதரி ராணியை பொறுப்பான தாயாக இருந்து

பார்த்துக் கொண்ட தாயின் செயல் உன்னதமானதே.

இறந்த மனைவியை 200 கிலோமீட்டர் சுமந்து சென்ற

கணவர் போற்றுதற்குரியவரே.

தன் தகப்பனாரை பல மைல்கள் தூரம் மிதிவண்டியில்

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற மகள்

உண்மையிலேயே உயர்தரமானவர்களே.

எண்ணற்றவர்களை இப்படியே இன்றும்

நம்மைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே இருக்கின்றோம்.

சிலுவையை தன்னோடு இணைத்துக் கொண்டு

பயணித்த பலர் மகிழ்ந்தே வாழ்ந்திருக்கின்றார்கள்.

வாழ்ந்தும் வருகின்றார்கள்.

வாழ்வோருக்கும் நல்ல மாதிரிகையாகவும் இருந்து வருகின்றார்கள்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

# பனிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்.

### மரணம்!

**எசாயா 55:9 "மண்ணுலகில் இருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பது போல, உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன."**



மரணமே மனிதனை கவ்விக் கொண்டது.

இருக்க வேண்டும் என்றே உருவாக்கப்பட்ட மனிதன்

தன் சாயலில் உருவாக்கப்பட்ட மனிதன்

தன் பாவத்தாலேயே மரணத்தை

மண்ணுலகிற்கு வருவித்துக் கொண்டான்.

மரணத்தை பாவத்தின் சம்பளமாகவே பெற்ற மனிதன்

மண்ணுலகில் மரணத்தைக் கண்டு அஞ்சுகின்றார்.

மரணத்தை துக்கமாகவே கொண்டாடுகின்றான்.

இறை இயேசுவின் பார்வையில், "அவன் தூங்குகின்றான்" (இலாசர் - யோவான் 11) என்றார்.

மரணம் துக்கமல்ல, கொண்டாடப்படக்கூடிய ஒன்று.

"மரணம் எனக்கு ஆதாயம்" என்று சொல்லி பவுல் மகிழ்ந்தார்.

'மரணத்தின் வழியே மீட்பு உண்டு' என்று உணர்த்தினார்.

மீட்பு தரும் மரணம் மகிழ்வடைய கூடிய ஒன்றே.

மரணத்தினால் தான் உயிர்ப்பின் மகத்துவத்தை,

மாட்சிமையைக் காண முடியும்.

‘மரணப் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்,

நீர் எனக்கு பாதுகாப்பாக, அரணாக இருக்கின்றீர்’

என்று தாவீது அரசர் திருப்பாடலில் பாடினார். திருப்பாடல் 23:4

அறிவிலியே, மரணத்தைக் கண்டு அஞ்சுவான்.

“மரணத்தின் வேளையிலும் நீர் என்னோடு இருப்பதால்

நான் எதற்கும் அஞ்சமாட்டேன்” என்றார் தாவீது அரசர்.

அன்றாடம் நாம் சொல்லும் மங்கள வார்த்தை செபத்தினில்

“என் மரண வேளையில் எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்”

என மன்றாடும் நாம்

மரணிக்கின்ற வேளையில்

அன்று கல்வாரியில் சிலுவையின் அடியில் நின்ற தாய்

இன்றும் நம்மோடு இருக்க நாம் ஏன் அஞ்ச வேண்டும்?

மகிழ்வோடு மரணத்தைச் சந்தித்து தழுவிக் கொள்ளலாமே.

பாவத்திற்கு நம்மை விலக்கிக் கொள்ள நாம் முற்பட்டு

பவுலைப் போல நாமும் கேட்போம்.

“சாவே, மரணமே உன் கொடுக்கு எங்கே?”

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!!

# பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் திருவுடலை மரியாவின் மடியில் வளர்த்துகிறார்கள்.

### முறிவுபடாது!

**“பாஸ்கா கொண்டாட்டத்திற்கு வெட்டப்படும் எந்த ஆட்டின் எலும்பையும் முறிக்கக்கூடாது என்பது சட்டம்.” விப 12:46 எண் 09:12**

திருப்பாடல் 34:20 “அவர்களின் எலும்புகளையெல்லாம் அவர் பாதுகாக்கின்றார். அவற்றுள் ஒன்றும் முறிவுபடாது” என்று.

யோவா 19:33 “ஏற்கெனவே இறந்து போய் இருந்ததைக் கண்டு

இயேசுவின் கால்களை முறிக்கவில்லை.”



சிலுவையில் தொங்கவிடப்பட்டவர்கள்

இறந்து போய் இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த

அவர்களின் கால்களை முறித்துப் பார்ப்பது வழக்கம், பழக்கம்.

ஆனால் இயேசுவின் வாழ்வில் எந்த எலும்பும் முறிக்கப்படவில்லை.

எவ்வளவு ஆனந்தமானது.

இறைவனின் வாக்கு எதுவும் பொய்யாகாது என்பது மகிழ்வு தானே.

திருப்பாடல் 91:11,12 “நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி தம் தூதருக்கு அவர் கட்டளையிடுவார். உம் கால் கல்லிலே மோதாதவாறு தூதர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்.”

இதனைத் தான் சாத்தான் இயேசுவின் பணிவாழ்வுக்கு முன் சோதித்த போது மேற்கோள் காட்டி, “நீர் இறைமகன்” என்று நிருபிக்க கேட்டுக் கொண்டது. மத் 04:06

ஆண்டவரை நம்புவோருக்கு அவர் வாக்களித்தது போல

எலும்புகள் அத்தனையும் உயிர்பெறும், வலுப்பெறும்,

முறிவுபடாது என்பதுவே ஆதாரமான உண்மை.

மான் போல் துள்ளிக் குதிப்பார்கள், நடப்பார்கள், ஓடுவார்கள்

சோர்வடைய மாட்டார்கள். எசா 35:06 மலாக்கி 04:02

நம்பிக்கையோடு கூரையைப் பிரித்து, இறக்கிய

முடக்குவாதமுற்றவரை “படுக்கையை தூக்கிக் கொண்டு நட” என்றார்.

“38 ஆண்டுகளாக இருக்கிறேன், கவனிப்பாரற்று இருக்கிறேன்”

என்றவரைப் பார்த்து, “படுக்கையை தூக்கிக் கொண்டு நட” என்றார்.

இயேசுவின் பெயரால் பேதுரு, கோவிலின் வாயிலில் இருந்த மனிதரை,

“எழுந்து நட” என்ற போது அவன் கால்கள் வலுப்பெற்றன.

எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தி.

எலும்புகள் முறிவுபடாது.

ஆண்டவரை நம்பும் யாவருக்கும்

அவர்தம் தூதரைக் கொண்டு பாதுகாக்கின்றார்

என்பது எவ்வளவு ஆனந்தமானது.

வாக்கு மாறாத தேவன்மீது நம்பிக்கை கொள்ளும்

மனிதரின் எலும்புகளும் உறுதிபெறும்.

மான்போல இளம் கன்றைப் போல ஓடுவார்கள்,

நடப்பார்கள், துள்ளிக்குதிப்பார்கள்.

இதுவே ஆனந்தம்! இன்றே அக்களிப்போம்!!

# பதினான்காம் நிலை

## இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

### மாற்றான்!

யோவான் 19:41 "ஒரு தோட்டம் இருந்தது.

அங்கே ஒரு புதிய கல்லறை இருந்தது.

அதுவரை யாரும் அங்கே அடக்கம் செய்யப்படவில்லை.

இயேசுவை அதிலே அடக்கம் செய்தார்கள்."



"மாற்றானின் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்றார் அந்நாள் தமிழக முதலமைச்சர் அண்ணா.

எதிர்வரிசையில் இருப்பதனால் அவர்கள் எதிரி இல்லை.

அங்கேயும் பல பெரியவர்கள், பழுத்தவர்கள்,

அரசியல் முதிர்ச்சி கொண்டவர்கள், படித்தவர்கள் உண்டு.

குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது என்ற அர்த்தத்தில் கூறினார்.

அடக்கம் செய்யப்பட

'**மாற்றான்**' தனக்கென வைத்து இருந்த கல்லறையை

கொடுத்து உதவி செய்திட்டான்.

தாராளமாக கொடுத்து உதவியதாலோ என்னவோ

உலகிலேயே அந்த ஒரு கல்லறை மட்டுமே

இன்றும் '**காலியாகவே**' இருக்கிறது.

இருக்கும் போது பேசுவதை விட

இறந்த பின் மனிதர்கள் இறந்தவரைக் குறித்து

பேசுவதுதான் உண்மையானதாக இருக்க முடியும்.

அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர்

நிக்கதேம் கூட சேர்ந்து இயேசுவை அடக்கம் செய்தார்.

இயேசுவுக்கு யோசேப்பு என்பவர் '**மாற்றானாக**'

உதவி செய்பவனாக கிடைக்கப்பெற்றது

எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய ஒரு காரியம்.

தனக்கென ஆயத்தப்படுத்தி இருந்த கல்லறையில்

ஒரு மாற்றானை, இயேசுவை வைத்து அடக்கம் செய்ததில் யோசேப்புக்கு

எவ்வளவு மகிழ்ச்சி இருந்திருக்கும்.

பிறருக்கு இடம் கொடுப்பதில் நாமும்

ஒரு 'மாற்றானாக' யோசேப்பாக இருப்போமாயின்

நம்மைக் குறித்தும் இயேசு மகிழ்வார் அல்லவா?

இறுதியில் ஒரு மனிதனுக்கு தேவையானது

ஆறடி நிலம் தானே.

வாழும்போதே தாராளமாக

இருக்கும் இடத்தைப் பகிர்ந்து கொடுத்து

"நான் அன்னியனாக இருந்தேன்' நீ என்னை வரவேற்றாய்,

இடம் கொடுத்தாய்" என்று இயேசு சொல்லும் அளவுக்கு

பகிர்ந்து கொடுத்து பரந்த மனத்துடனே

நாமும் வாழ்வோமானால்

எவ்வளவு நலமாய் இருக்கும்.

அதுவே நமக்கு உயிர்ப்பின் உன்னத மாட்சிமைக்கு வழிகோலும்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!

இயேசுவுக்கு கிடைத்தது போல

நமக்கும் ஒரு மாற்றான் கிடைத்திட

நாம் ஒரு நல்ல ‘**மாற்றானாக**’ உதவியாளனாக தாராள பிரபுவாக

இருந்திட தீர்மானிப்போம், வரம் வேண்டுவோம்.

இதுவே ஆனந்தம்!

இன்றே அக்களிப்போம்!

## சிலுவைப்பாதை முடிவில்

பொறுத்தருளும் கர்த்தாவே!

உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

என்றென்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் சுவாமி.



தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

## திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

புனித மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். / ஆமென்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!